1990 மே 5] [திரு. மு. இராமநாதன்]

கட்டிடங்கள் குறித்த நான்காவது அறிக்கையையும் கூட்டுறவு துறை குறித்த ஐந்தாவது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் மூலம் 1989-90ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 43 முதல் 45 வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 49 மற்றும் 50-ஆவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன் போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அவைக்கு அளிக்கப்படுகின்றன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதி கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்தசட்ட முன்வடிவு 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொது விற்பனை வரி இரண்டாவது திருத்தசட்ட முன்வடிவு. 1990,

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. மானியக் கோரிக்கைகள், *1990—91* (விவாதமும், வாக்கெடுப்பும்)—தொடர்ச்சி.

(அ) **கோரிக்கை எண் 7— மாநிலச் சட்ட மன்றம்.**

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,23,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிற மாநிலங்களிலுள்ளதைப்போல் மாதச் சம்பளமாக ரூ. 5,000 நிர்ணயம் செய்வது (மேசையைத் தட்டும் ஒலி) குறித்து, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச்சட்டமன்றம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,23,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுக்கே இவ்வளவு தட்டு. (சிரிப்பு.)

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு பணியாற்றும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதியில் தட்டச்சு வசதியுடன் கூடிய தனி அலுவலகம் ஏற்படுத்திதர வேண்டிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — VAIMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS